செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 15 நாள்: 9/1/18

# வேலூர் மாநகராட்சி

## பொதுமக்களுக்கு ஒரு அறிவிப்பு

<u>ந.க.எண்:17903/2015/இ1</u> <u>நாள்:09.01.2018</u>

வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டம் **பகுதி 3 திட்டம் (Phase-III)** திட்டத்தினை கீழ்கண்ட வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் செயல்படுத்தவும், வார்டு எண்.6, 7, 9, 12, 14, 15, 13, 42 , 43 மற்றம் 44 (முழுவதும்) வார்டு எண்.8, 10, 37, 38, 39, 40, 41, 45, 46, 49, 50, 51, 52 மற்றும் 53 (பகுதி) ஆகிய 24 வார்டுகளுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு புதைவடிகால் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் 3 இடங்களில் கழிவு நிரேற்று நிலையங்களும் 5 இடங்களில் கழிவு நீர்உந்து நிலையங்களும் கட்ட மேற்படி திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மத்திய பொதுசுகாதார மற்றும் சுற்று சூழல் பொறியியல் நிறுவன விதிமுறைகளின் படி புதைவடிகால் திட்டம் ரூ. 292.77 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம்(TUFIDCO), தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் லிமிடெட், ( TNUIFSL), ஆசிய வளர்ச்சி நிதி வங்கி (ADB)ஆகிய நிறுவனங்களின் நிதி உதவியின் கீழ் மாநகராட்சி பங்களிப்புடன் அம்ரூத் திட்டத்தில் புதைவடிகால் திட்டம் பகுதி 3 (AMRUT) 2016-17ல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இது தொடர்பாக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு தொடர்பான கூட்டம் வரும் 10.01.2018 (புதன் கிழமை) மாலை 4.00 மணியளவில் வேலூர் மாநகராட்சி மைய அலுவலக மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. எனவே அதுசமயம் பொதுமக்கள் மற்றும் நலச்சங்கத்தினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு தங்களது மேலான கருத்துக்களை தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

09/01/18

ஆணையருக்காக
வேலூர் மாநகராட்சி

9/1/18

செ.ம.தொ.அ.
வேலூர்-9.